tamilguru.lk

# ஊடக அறிவித்தல்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2024(2025) பெறுபேறுகள் வெளியிடல்

2024(2025) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையின் பெறுபேறுகள் 2025.07.11 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| பாடசாலைப் பரீட்சார்த்திகள் | - | 398,182 |
| தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | - | 75,965 |
| மொத்தம் | - | **474,147** |

| | | |
|---|---|---|
| **பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை** | - | **3664** |
| **இணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை** | - | **534** |

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பின்வரும் உத்தியோகபூர்வ இணையத்தளங்களினுள் பிரவேசித்து பரீட்சார்த்திகளின் சரியான சுட்டெண்களை உள்ளடக்குவதன் மூலம் இப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

www.doenets.lk , www.results.exams.gov.lk

02. சகல அதிபர்களுக்கும் விண்ணப்பங்களை அனுப்புவதற்காக தற்போது வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User name), கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி உரிய பாடசாலைப் பெறுபேற்று அட்டவணையை தரவிறக்கம் செய்து அதன் அச்சுப்பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- https://onlineexams.gov.lk/eic இல் School Account Login ஊடாகப் பிரவேசிக்கவும்.

03. சகல மாகாண/வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தங்களது மாகாண/வலயத்திலுள்ள சகல பாடசாலை மாணவர்களினதும் பெறுபேறுகளை தரவிறக்கம் செய்வதற்கு பயநர் பெயர், கடவுச்சொல் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

- https://onlineexams.gov.lk/onlineapps இல் Exam Result Sheets என்பதனைக் கிளிக் செய்யவும்.

tamilguru.lk

04. சகல பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குவதன் மூலம் பெறுபேற்றுப் பட்டியலை (Results Schedule) தரவிறக்கம் செய்வதற்கு/பார்வையிடுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தரவிறக்கம் செய்யப்பட்ட அச்சுப்பிரதிப் பட்டியல் க.பொ.த. (உயர்தர) வகுப்புகளில் சேர்வதற்கான செல்லுபடியாகும் ஓர் ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

- https://onlineexams.gov.lk/eic இல் Personal Account Login ஊடாகப் பிரவேசிக்கவும்.

05. சகல பாடசாலைப் பரீட்சார்த்திகளினதும் அச்சிடப்பட்ட தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணைகள் உரிய அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அச்சிடப்பட்ட தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணைகள் அப் பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் மீள் பரிசீலணையின் பின்னர் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

06. உள்நாட்டு, சர்வதேச பயன்பாட்டிற்காக இப் பரீட்சைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக 14.07.2025 ஆம் திகதியிலிருந்து நிகழ்நிலை முறைமையூடாக விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

07. மீள் பரிசீலணைக்கான விண்ணப்பங்கள் 14.07.2025 ஆம் திகதி தொடக்கம் 28.07.2025 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கோரப்படும்.

08. பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின், கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| நேரடி அழைப்பு இலக்கம் | : 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | : 0112784537, 0112784208, 0112786616<br>0112785922 |
| தொலைநகல் இலக்கம் | : 0112784422 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்